ஸ்கார்பரோ ஆர்ட்ஸ் என்பது ஒரு இலாப-நோக்கற்ற அமைப்பாகும், இது ஸ்கார்பரோவில் கலைகள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளை ஊக்குவித்து வளர்க்கிறது.

நாங்கள் ஒரு உள்ளூர் கலைச் சேவை அமைப்பாகும். இதன் அர்த்தம் என்ன என்பதை இந்த இணையத்தளத்தில் நீங்கள் மேலும் அறிந்துகொள்ளலாம்: http://www.toronto.ca/culture/arts-services/laso.htm

நம்முடைய சமுதாயத்திற்குத் தேவையான கலையை-அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்காக. நாங்கள் கலைகள், கல்வி மற்றும் சமூகக் குழுக்களுடன் இணைந்துள்ளோம்.

- குழந்தைகளுக்கான பாடசாலைக்கு-பிந்தைய கலை நிகழ்ச்சிகள்
- இலவச வெளிப்புற சமுதாய கலைத் திருவிழாக்கள்
- தனிநபர் வளர்ச்சி மற்றும் சமுதாய ஈடுபாட்டை வளர்க்கின்ற நிகழ்ச்சிகள்
- கலைக் கண்காட்சிகள் மற்றும் போட்டிகள்

ஸ்கார்பரோ ஆர்ட்ஸில், நாங்கள் கீழ்கண்டவற்றை மதிக்கிறோம்:

படைப்புத் திறன் மற்றும் வெளிப்பாடு – கலையானது வாழ்க்கையை மாற்றக்கூடிய ஒரு சக்திவாய்ந்த கருவி என நாங்கள் நம்புகிறோம்.

உட்படுத்தல் மற்றும் அணுகுத்தன்மை – நாங்கள் ஸ்கார்பரோ முழுவதும் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதுடன் பெரும்பாலான எங்களுடைய நிகழ்ச்சித் திட்டங்கள் முற்றிலும் இலவசமானவை!

புதுமையைப் புகுத்தல் – புதிய எண்ணங்கள் மற்றும் சவால்களை நாங்கள் தொடர்ந்து தேடிக் கண்டறிகிறோம்

பொறுப்புடைமை – நாங்கள் நிதி மற்றும் சமூகப் பொறுப்பின் மதிப்புக்குரிய 30+ வருட வரலாற்றைக் கொண்டிருக்கிறோம்

பன்முகக் கலாச்சாரம் – எங்களுடைய உறுப்பினர்கள் பல்வேறு சமுதாயம் மற்றும் கலாச்சாரப் பின்னணியைக் கொண்டவர்களாவர்.

ஸ்கார்பரோ வாழ் குடிமக்களுக்குத் பொருத்தமான மற்றும் அவர்களுக்குப் பயன்படுகின்ற கலை நிகழ்ச்சிகளை உருவாக்குவதற்காக நாங்கள் தொடர்ந்து எங்களுடைய சமுதாயத்திற்கு பாடுபடுகிறோம். அதனால் தான் நாங்கள் உங்களிடமிருந்து கருத்தைப் பெற விரும்புகிறோம்.

நாங்கள் உங்களுக்காக என்ன செய்யலாம்?

நீங்கள் ஸ்கார்பரோவிலுள்ள மற்ற கலைஞர்களின் வலையமைப்பினுள் சேர விரும்பும் ஒரு கலைஞரா?

ஸ்கார்பரோ ஆர்ட்ஸுடன் ஏதேனும் வகையில் கைகோர்க்க விரும்பும் ஒரு குழுவில் நீங்கள் இருக்கிறீர்களா?

நீங்கள் ஸ்கார்பரோவில் வசிக்கிறீர்களா மற்றும் உங்களுக்கு அருகாமையிலுள்ள பகுதிகளில் மேலும் அதிக கலை நிகழ்ச்சிகளைக் காண விரும்புகிறீர்களா?

உள்ளூர் கலை நிகழ்ச்சிகள், திருவிழாக்கள், பயிற்சி வகுப்புகள் மற்றும் பிற கலைசார்ந்த வாய்ப்புகள் குறித்து புதிய தகவல்களைப் பெற விரும்புகிறீர்களா?

அப்படியாயின் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்! நீங்கள் எண்ணற்ற வழிகளில் அவற்றைச் செய்யலாம்:

- எங்களுடைய இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்: www.scarborougharts.com
- எங்களுக்கு info@scarborougharts.com என்ற முகவரியில் மின்னஞ்சல் அனுப்புங்கள்
- 416-698-7322 என்ற எண்ணில் எங்களை அழைத்து எங்களுடைய நட்பார்ந்த பணியாளர்களில் யாரிடமேனும் பேசுங்கள்
- 1859 கிங்ஸ்டன் ரோடிலுள்ள எங்களுடைய அலுவலகம் / கலையரங்கத்திற்கு வருகை தரவும்
- ஒரு ஸ்கார்பரோ ஆர்ட்ஸ் உறுப்பினராக பதிவு செய்து கொள்ளுங்கள்!